டிஜிட்டல் டெய்லி

# அக்ரி-டாக்டர்

agridoctor.in

கல்யாண் ஜுவல்லர்ஸ்

agridoctor.in | 7.12.2025 ஞாயிற்றுக்கிழமை | பக்கங்கள் 27 | RNI No.TNTAM/2012/49602 | Vol.13, Issue : 140 - Madurai | Online Edition

# தமிழ்நாட்டில் டிஜிட்டல் வேளாண் இயக்கத்தின் செயல்பாடு

புது தில்லி, டிச.6

டிஜிட்டல் வேளாண் இயக்கம், வேளாண்மைக்கான டிஜிட்டல் பொது உள்கட்டமைப்பை உருவாக்குவதை நோக்கமாகக் கொண்டுள்ளது.

இது, விவசாயிகளை மையமாகக் கொண்ட புதுமையான டிஜிட்டல் தீர்வுகளை இயக்கி அவற்றை நம்பகமானதாக மாற்றும். பயிர் தொடர்பான தகவல்கள் அனைத்து விவசாயி களுக்கும் சரியான நேரத்தில் கிடைக்கும். அக்ரிஸ்டாக் (Agri Stack) உள்கட்டமைப்பு, விவசாயத் துறையுடன் தொடர்புடைய மூன்று அடிப்படைப் பதிவேடுகள் அல்லது தரவுத்தளங்களைக் (புவிசார் குறிப்பு கிராம வரைபடங்கள், பயிர் விதைப்பு பதிவேடு மற்றும் விவசாயிகள் பதிவேடு) கொண்டு உள்ளது. இவை அனைத்தும் மாநில அரசுகள்/யூனியன் பிரதேசங்களால் உருவாக்கப்பட்டு பராமரிக்கப்படுகின்றன.

டிஜிட்டல் வேளாண் இயக்கத்தின் கீழ் உள்ள மாநில விவசாயிகள் பதிவேடு, பெண்கள் உட்பட அனைத்து நில உரிமையாளர் விவசாயிகளையும் உள்ளடக்கியது. 30.11.25 நிலவரப்படி, தமிழ்நாட்டில் 32.57 லட்சம் விவசாயி அடையாளங்கள் உட்பட மொத்தம் 7.64 கோடி பிரத்தியேக விவசாயி அடையாளங்கள் உருவாக்கப்பட்டுள்ளன.



மேலும், 2024 காரீப் பருவத்தில் மேற்கொள்ளப்பட்ட டிஜிட்டல் பயிர் கணக் கெடுப்பு, 604 மாவட்டங்களில் 28.5 கோடிக்கும் மேற்பட்ட நிலங்களை உள்ளடக்கியிருந்தது. இதில் தமிழ்நாட்டின் 38 மாவட்டங்களில் 3.44 கோடி நிலங்கள் அடங்கும்.

செல்பேசிகள் இல்லாத விவசாயிகளும் டிஜிட்டல் சேவைகளின் நன்மைகளைப் பெறுவதை உறுதி செய்ய கூடுதல் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன.

அத்தகைய விவசாயிகள் அக்ரிஸ்டாக்-இல் பதிவு செய்து, வேளாண் உற்பத்தி அமைப்புகள் மற்றும் பொது சேவை மையங்கள் போன்ற வசதிகளைப் பயன்படுத்தி சேவைகள் மற்றும் சலுகைகளைப் பெறலாம். பாஷினி தளங்களின் ஒருங்கிணைப்பு மூலம் டிஜிட்டல் பயன்பாடுகள் உள்ளூர் மொழிகளிலும் கிடைக்கின்றன.

மாநிலங்களவையில் கேள்வி ஒன்றுக்கு எழுத்துப் பூர்வமாக அளித்த பதிலில் மத்திய வேளாண்மை மற்றும் விவசாயிகள் நலத்துறை இணையமைச்சர் ராம்நாத் தாக்கூர் இதைத் தெரிவித்தார்.

**மரம் வளர்ப்போம்! மழை பெறுவோம்!**




agridoctor.in the Tamil Digital daily published and edited by **M.J.Vasudevan**,
18, Chandrakanthi Nagar, Ponmeni, Bye Pass Road, Madurai - 625 016. Ph. : 4366425.

# தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தில்

# அடுமனைப் பொருட்கள் தயாரிக்கும் பயிற்சி

கோயம்புத்தூர், டிச.6

தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தில் அடுமனைப் பொருட்கள் தயாரிக்கும் இரண்டு நாட்கள் பயிற்சி வருகிற 09.12.25 மற்றும் 10.12.25 தேதிகளில் நடைபெறுகிறது.

அடுமனை உணவுப் பொருட்களுக்கு தற்பொழுது மக்கள் மத்தியில், அதிக வரவேற்பு உள்ளது. அதற்கான முக்கியக் காரணம் விரும்பத்தக்க வகையிலும் பற்சுவைகளிலும் மிக எளிதில் இவை கிடைப்பதேயாகும். இந்தப் பயிற்சி சிறுதொழில் முனைவோருக்கு தங்களது வருமானத்தைப் பெருக்க பெரிதும் உதவியாக இருக்கும். ஆகவே, பயிற்சியின் போது கீழ்க்காணும் அடுமனைப் பொருட்கள் எளிய முறையில் தயாரிப்பதற்கான தொழில்நுட்பப் பயிற்சி அளிக்கப்படுகிறது. அவையாவன:

- ரொட்டி வகைகள்
- கேக் மற்றும் பிஸ்கட்
- பப்ஸ்

இத்தொழில்நுட்பத்தில் ஆர்வமுள்ளவர்கள் ரூ.1,770/- (ரூ.1500 + GST 18%) செலுத்தி தங்கள் பெயரைப் பதிவு செய்து கொள்ளலாம்.

பயிற்சியானது அறுவடை பின்சார் தொழில்நுட்ப மையம், வேளாண் பொறியியல் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையம், தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம், (வாயில் எண்.7, மருதமலை சாலை வழி) கோயம்புத்தூர்– 641 003.

மேலும் விபரங்களுக்கு பேராசிரியர் மற்றும் தலைவர், அறுவடை பின்சார் தொழில்நுட்ப மையம், வேளாண்மைப் பொறியியல் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையம், தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம், கோயம்புத்தூர். அலைபேசி எண் : 94885 18268, மின்னஞ்சல் : phtc@tnau.ac.in தொடர்பு கொள்ளலாம்.

அக்ரி-டாக்டர்.காம் பொறுப்புத்துறப்பு (Disclaimer): இந்த மின்னிதழில் வரும் விளம்பரங்களின் உண்மைத் தன்மைக்கு நாளிதழ் பொறுப்பேற்காது. இதன் உரிமையாளரோ, வெளியீட்டு நிறுவனமோ, வெளியீட்டாளரே, ஆசிரியரோ, மற்ற ஊழியர்களோ எந்த வகையிலும் விளம்பரங்களின் உண்மைத் தன்மைக்கு பொறுப்பானவர்கள் அல்ல. வாசகர்கள் தாங்களே ஆய்ந்து அறிந்து சுய விருப்பு அடிப்படையில் தீர்மானிக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள். விளம்பரதாரர்கள், நிறுவனங்களின் பொருட்கள், சேவைகள் போன்றவை குறித்த செய்திகளுக்கும் மேற்கண்ட பொறுப்புத் துறப்பு பொருந்தும் என்பதையும் அறியவும்.

அக்ரி-டாக்டர்
agridoctor.in Agri Digital daily

KALYAN JEWELLERS

# எல்லா நாளும் தள்ளுபடி உண்டு உங்களுக்கு மட்டும்

சிறப்புச்சலுகை



கல்யாண் ஜுவல்லர்ஸ்-ல் நகை எடுக்க வரும்போது **அக்ரி டாக்டர் வாசகர்** என்று அறிமுகப் படுத்திக் கொண்டு சிறப்பான சேவையையும், பிரத்யேக தள்ளுபடியும் பெறுங்கள். இந்த தள்ளுபடி உங்களுக்கு மட்டுமே அதுவும் எல்லா நாட்களிலும்.

குறிப்பு: அதிகார பூர்வமாக கல்யாண் ஜுவல்லர்ஸ் தள்ளுபடி அறிவிக்கும் நாட்களில் அந்த தள்ளுபடி மட்டும் செல்லுபடியாகும்.மேலும் உதவி தேவை எனில் கடையில் இருந்தே எங்களை தொடர்பு கொள்ளுங்கள்.

96331 42000, 86104 71220. 73558 87778, 99408 27084, 80563 05483

# எண்ணெய்வித்து பயிர்களில் மேம்படுத்தப்பட்ட விதை உற்பத்தி தொழில்நுட்பங்கள் பயிற்சி



கடலூர், டிச.6

கடலூர் மாவட்டம், விருத்தாசலம், வேளாண்மை அறிவியல் நிலையம் சார்பாக எண்ணெய்வித்து பயிர்களில் மேம்படுத்தப்பட்ட விதை உற்பத்தி தொழில் நுட்பங்கள் பற்றிய பயிற்சி 6.12.25 அன்று கொளவாய் (மங்களூர் வட்டாரம்) கிராமத்தில் நடைப்பெற்றது.

இப்பயிற்சியின் திட்ட ஒருங்கிணைப்பாளர் முனைவர் க.நடராஜன், எண்ணெய்வித்து பயிர்களில் சாகுபடி தொழில் நுட்பங்கள், புதிய இரங்கள், விதை நேர்த்தி, உயிர் உரங்கள், நோய் எதிர் உயிர் கொல்லி விதை நேர்த்தி, களைநிர்வாகம், ஜிப்சம் மற்றும் மண் அனைத்தல் பயன்பாடு, வேம்பு பொருட்கள் கொண்டு பூச்சிநோய் பாதுகாப்பு, த.வே.ப.க., பயிர் ஊக்கி நிலக்கடலைரிச் மற்றும் த.வே.ப.க இணையத்தளம் பயன்பாடு பற்றி விவசாயிகளுக்கு விரிவாக எடுத்துரைத்தார்.

இப்பயிற்சியில் கொளவாயகிராமம், மங்களூர் வட்டாரத்தை சேர்ந்த 50-க்கும் மேற்பட்ட விவசாயிகள் கலந்து கொண்டு பயன் பெற்றனர்.



அக்ரி-டாக்டர்
agridoctor.in Agri Digital daily





**அன்புடையீர்,**

நமது 'அக்ரி டாக்டர்' மின்னிதழ் கடந்த 13 ஆண்டுகளாக மின் நாளிதழ் வடிவில் லட்சக்கணக்கான விவசாயிகள், வேளாண் துறை மாணவர்கள் ஆகியோருக்குத் தேவையான தகவல்களை செய்தி வடிவிலும், கட்டுரை வடிவிலும் வழங்கி வருகிறது. இதனால் பலனடைந்தோர் ஏராளம்.

வேளாண் துறை அதிகாரிகள், வேளாண் துறை வல்லுநர்கள், வேளாண் பல்கலைக்கழகப் பேராசிரியர்கள், மத்திய, மாநில அரசுத் துறை அதிகாரிகள் ஆகியோர் விவசாயிகள், மாணவர்கள் பயனடையும் வகையில், பல்வேறு தகவல்களை செய்தி வடிவிலும் கட்டுரை வடிவிலும் அளித்து வருகின்றனர்.

இத் தருணத்தில், நமது 'அக்ரி டாக்டர்' மின்னிதழ், நூல் வடிவில் ஆண்டு மலரை வெளியிட முடிவு செய்துள்ளது. இந்த மலர் விரைவில் வெளியாகவிருக்கிறது. இந்த ஆண்டு மலரில் விவசாயம் தொடர்பான ஏராளமான கட்டுரைகள், விவசாயிகளின் அனுபவங்கள், வெற்றிக் கதைகள், சந்தித்த பிரச்சினைகள் உள்ளிட்டவை இடம்பெறவுள்ளன.

இந்த ஆண்டு மலர் வேளாண் துறை சார்ந்த மாணவர்களுக்கு பெரிதும் உதவியாக இருக்கும் என்பதில் ஐயமில்லை. எனவே, இந்த ஆண்டு மலரை வாங்கி பயனடையுமாறு மாணவர்களுக்குப் பரிந்துரை செய்யும்படி தங்களை பணிவன்புடன் கேட்டுக் கொள்கிறேன்.

மேலும், இந்த மலர் ஆயிரக்கணக்கான விவசாயிகளைச் சென்றடையவுள்ளதால், தங்களது கல்லூரி / நிறுவனங்கள் தொடர்பான விளம்பரங்களை இந்த மலரில் அளித்து உதவும்படி கேட்டுக் கொள்கிறேன்.

தங்கள்
உண்மையுள்ள

ஆசிரியர் & வெளியீட்டாளர்
எம்.ஜெ.வாசுதேவன்

தொடர்புக்கு
+91 80563 05483
+91 9344811812

நன்றி

# தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தில் உலக மண் தினம் 2025-ஐ முன்னிட்டு பேரணி மற்றும் சொற்பொழிவு நிகழ்வு நடந்தது

கோயம்புத்தூர், டிச.6

மண்ணின் முக்கியபங்கு, பாதுகாப்பு மற்றும் மண்வள மேலாண்மை குறித்து பரவலான விழிப்புணர்வை ஏற்படுத்த, தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தின் இந்திய மண்ணியல் சங்கம் (ISSS), தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தின் கோயம்புத்தூர் பிரிவு, மண்ணியல் மற்றும் வேளாண் வேதியியல் துறை, இயற்கை வள மேலாண்மை இயக்குநரகம் டிசம்பர் 5, 25 அன்று 'ஆரோக்கியமான நகரங்களுக்கு ஆரோக்கியமான மண்' என்ற உலகளாவிய கருப்பொருளின் கீழ் 'உலக மண்தினம் 2025' யை கொண்டாடியது.




இதன் ஒரு பகுதியாக, தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக் கழக வளாகத்தில் இயற்கை வள மேலாண்மை இயக்கு நரகத்தின் முதுகலை மற்றும் முனைவர் பட்ட மாணவர்களின் பேரணி ஏற்பாடு செய்யப்பட்டது. முனைவர் ர.தமிழ்வேந்தன், தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தின் துணைவேந்தர் (பொ) மற்றும் பதிவாளர், பேரணியை கொடியசைத்து தொடங்கி வைத்து, சுற்றுச்சூழல் பாதுகாப்பை மேம்படுத்துவதற்காக மரக் கன்றுகளை வழங்கினார்.

14வது முனைவர் பி.ராமமூர்த்தி நினைவு சொற்பொழிவு நிகழ்ச்சியை கோயம்புத்தூர், தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தின் மண்ணியல் மற்றும் வேளாண் வேதியியல் துறையின் இந்திய மண்ணியல் சங்கம் – கோயம் புத்தூர் பிரிவு ஏற்பாடு செய்தது.

புகழ்பெற்ற மண் விஞ்ஞானி முனைவர் பி.ராமமூர்த்தியின் நினைவாக இந்த நிகழ்வு நடைபெற்றது. இதற்கு துணைவேந்தர் (பொ) மற்றும் பதிவாளர் தலைமை தாங்கினார்.

முனைவர் து.செல்வி, பேராசிரியர் மற்றும் தலைவர், மண்ணியல் மற்றும் வேளாண் வேதியியல் துறை மற்றும் தலைவர், இந்தியமண்ணியல் சங்கம், கோயம்புத்தூர் பிரிவு கூட்டத்தினரை வரவேற்று, மண்ணியல் மற்றும் பயிர் ஊட்டச்சத்துக்கள் ஆராய்ச்சியில் முனைவர் பி.ராமமூர்த்தியின் பங்களிப்புகளை எடுத்துரைத்தார்.



முனைவர் பி.பாலசுப்பிரமணியம், இயக்குநர் (இயற்கை வள மேலாண்மை), தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம், கோயம்புத்தூர், முனைவர் பி.ராஜா, முன்னாள் முதன்மை விஞ்ஞானி, இந்திய மண் மற்றும் நீர் பாதுகாப்பு ஆராய்ச்சி மையம், கோராபுட், ஒடிசா, அறிமுகப்படுத்தி, மண்ணியலுக்கு அவர் அளித்த சிறந்த பங்களிப்புகளை விவரித்தார். முனைவர் ராஜா, ஊட்டியில் உள்ள இந்திய மண் மற்றும் நீர் பாதுகாப்பு ஆராய்ச்சி மையத்தில் ஒரு அதி நவீன காலநிலை ஆராய்ச்சி ஆய்வகத்தை நிறுவியுள்ளார்.

மேலும் கார்பன்ஃப்ளக்ஸ் கோபுரங்களைப் பயன்படுத்தி மேம்பட்ட ஆராய்ச்சிக்கு குறிப்பிடத்தக்க பங்களிப்பை வழங்கி உள்ளார். அவரது கல்வி சாதனைகளில் 200க்கும் மேற்பட்ட வெளியீடுகள், 100 பத்திரிகை ஆவணங்கள் மற்றும் 15 வெளிப்புற நிதியுதவி மானியங்கள் உட்பட 33 ஆராய்ச்சி திட்டங்களுக்கு தலைமை தாங்குதல் ஆகியவை அடங்கும். குறிப்பிடத்தக்க வகையில், கடந்த ஐந்து ஆண்டுகளில் மட்டும், மண் ஆவியாதல் மற்றும் மண் மீள் தன்மை ஆகியவற்றில் கவனம் செலுத்தும் 25க்கும் மேற்பட்ட உயர்தாக்கக் கட்டுரை களை வெளியிட்டுள்ளார்.

லக்னோவில் உள்ள இந்திய கரும்பு ஆராய்ச்சி நிறுவனத்தின் ஐந்தாண்டு ஆய்வுக் குழு உறுப்பினர் முனைவர் பி.ரக்கியப்பன் சிறப்பு விருந்தினராக உரையாற்றினார். காலநிலை மாற்றம், புவி வெப்பமடைதல் மற்றும் வெள்ளம் மற்றும் வறட்சி போன்ற தீவிர நிகழ்வுகளின் அதிகரித்து வரும் அதிர்வின் காரணமாக மண் எதிர்கொள்ளும் அதிகரித்து வரும் அழுத்தங்களை அவர் அடிக்கோடிட்டுக் காட்டினார். மண் வளத்தையும் உற்பத்தித் திறனையும் மேம்படுத்துவதற்கான தொழில்நுட்பங்களைப் பற்றி விவாதித்த அவர், பிளாஸ்டிக் மாசுபாட்டை நிவர்த்தி செய்து பாலிதீன் இல்லாத நடைமுறைகளை ஊக்குவிக்க வேண்டியதன் அவசரத் தேவையை வலியுறுத்தினார். தனது தலைமை உரையில், முனைவர் ர.தமிழ்வேந்தன், தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தின் துணைவேந்தர் (பொ) மற்றும் பதிவாளர், மண் ஒரு முக்கியமான இயற்கை வளம் என்றும் விவசாயத்திற்கு ஒரு அடிப்படை உள்ளீடு என்றும் எடுத்துரைத்தார். நிலையான மண் மேலாண்மையை ஊக்குவிப்பதில் உலக மண் தினத்தின் முக்கியத்துவத்தை அவர் மீண்டும் வலியுறுத்தினார்.

2025ஆம் ஆண்டு கருப்பொருளான 'ஆரோக்கியமான நகரங்களுக்கு ஆரோக்கியமான மண்' என்பதை வலியுறுத்தி, நகர்ப்புற மண் பாதுகாப்பின் முக்கியத்துவத்தை அவர் வலியுறுத்தினார். தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக் கழகத்தின் மண்ணியல் மற்றும் வேளாண் வேதியியல் துறையால் உருவாக்கப்பட்ட தொழில்நுட்பங்கள் மற்றும் புதுமை யான தயாரிப்புகள் பற்றி அவர் எடுத்துரைத்தார், 2025 ஆம் ஆண்டு உலக மண் தினத்தை முன்னிட்டுநடத்தப்பட்ட பல்வேறு போட்டிகளில் வெற்றி பெற்ற இளங்கலை, முதுகலை மற்றும் முனைவர் பட்ட மாணவர்களுக்கு துணைவேந்தர் (பொ) பரிசுகளை வழங்கினார். முனைவர் பி.ராஜா 'தென்னிந்தியாவின் மேற்குத் தொடர்ச்சி மலைகளின் காலநிலைக்கு ஏற்ற விவசாயத் திற்கான கார்பன் இயக்கவியலின் நுணுக்கங்கள்' என்ற தலைப்பில் பேசினார். நீலகிரியின் கார்பன் இயக்கவியல் குறித்து அவர் விரிவாகக் கூறினார். தீவிர விவசாயம் ஆண்டு தோறும் தோராயமாக 1,31,562 டன் கார்பன் டை ஆக்சைடின் சமன்பாட்டை பங்களிக்கிறது. விவசாய உத்திகளுடன் வனப் பாதுகாப்பை ஒருங்கிணைக்கும் எதிர்காலக் கொள்கைகளின் அவசியத்தை வலியுறுத்தி அவர் முடித்தார். முனைவர் கே.எம்.செல்லமுத்து, பேராசிரியர் (மண்ணியல்) நன்றியுரை வழங்கினார். இந்நிகழ்ச்சியில் விஞ்ஞானிகள், மாணவர்கள் மற்றும் ஓய்வு பெற்ற மண்ணியல் விஞ்ஞானிகள் உட்பட சுமார் 200 உறுப்பினர்கள் நேரடியாக மற்றும் இணையவழி மூலம் கலந்து கொண்டு பயனடைந்தனர்.



# கொடைக்கானலில் உரக்கடைகளில் ஆய்வு



திண்டுக்கல், டிச.6

திண்டுக்கல் மாவட்டம், கொடைக்கானல் மற்றும் அதன் சுற்றுவட்டார கிராமங்களில் உள்ள உரக்கடைகள் பூச்சி மருந்து விற்பனை கடைகளில் வியாழன் மற்றும் வெள்ளிக்கிழமை இரண்டு நாட்கள் வேளாண்மை இணை இயக்குனர் அ.பாண்டியன், தலைமையில் வேளாண்மை துணை இயக்குநர் காளிமுத்து, வேளாண்மை உதவி இயக்குனர் தகவல் மற்றும் தரக்கட்டுப்பாடு யூ.ராஜேஸ்வரி மற்றும் வேளாண்மை அலுவலர்கள் குழுவினர் திடீர் ஆய்வுக்குழு இரண்டு குழுக்களாக ஆய்வு செய்தனர்.

இந்த ஆய்வின்படி உரம் மற்றும் பூச்சி மருந்து உரிமங்கள் முறையாக பராமரிக்கப்படுகிறதா, காலாவதியான பூச்சி மருந்துகள் கடைகளில் உள்ளதா உரங்களை விற்பனை முனைய கருவி மூலம் பில் செய்யப்படுகிறதா விற்பனை முனைய கருவிக்கும் குடோன் இருப்பும் ஒரே அளவாக உள்ளதா என்று ஆய்வு செய்யப்பட்டது. முறையாக உரிமம் மற்றும் ஆவணங்கள் பராமரிக்காத உரக்கடைகளில் கடுமை யான எச்சரிக்கை விடுக்கப்பட்டதோடு விற்பனை தடையும் செய்யப்பட்டது. இந்த ஆய்வில் கொடைக்கானல் மற்றும் சுற்றுவட்டார கிராமங்களான கிளாவரை, பூம்பாறை, வில்பட்டி, குண்டுபட்டி, நாயுடுபுரம், கூக்கால், பள்ளங்கி, பெருமாள் மலை போன்ற பகுதிகளில் ஆய்வு செய்யப்பட்டது.

உரம் மற்றும் பூச்சி மருந்துகள் விவசாயிகள் வாங்கும் பொழுது முறையான ரசீது போடப்படுகிறதா என்றும் ஆய்வு செய்யப்பட்டுள்ளது. விவசாயிகள் உரங்கள் விதைகள் பூச்சி மருந்து வாங்கும் பொழுது முறையான ரசீது பெற வேண்டும், காலாவதியான பூச்சி மருந்துகளை உபயோகப்படுத்தக் கூடாது என்று வேளாண்மை உதவி இயக்குனர் தகவல் மற்றும் தரக்கட்டுப்பாடு அறிவுறுத்தியுள்ளார்.

Rithvik Pipe

# 25 ஆண்டுகள் உத்தரவாதத்துடன் கிடைக்கும் ரித்விக் PVC பைப்புகள்




## பைப் மட்டும் வாங்காமல் நிம்மதியையும் சேர்த்து வாங்குங்கள்

- **25 ஆண்டுகள் உத்தரவாதம்** நம்பிக்கைக்கு அடையாளம்
- **100% LEAD-FREE பைப்புகள்** ஆரோக்கியமான தண்ணீர், ஆரோக்கியமான வாழ்க்கை
- **ISI சான்று பெற்ற பைப்புகள்** தரத்திற்கு ஒரே அடையாளம்
- **ISI பைப்புகள் மட்டும் தயாரிக்கும் நிறுவனம்**—தரத்தின் தனிப்பெரும் அடையாளம்
- **67 GRADE மூலப்பொருட்கள்** அதிக வலிமை, நீண்ட ஆயுள்
- **TEST CERTIFICATE – QR CODE மூலமாக** ஒவ்வொரு பைப்பிலும் நேரடியாக பதிவிறக்கம் செய்துகொள்ளலாம்
- **FREE ON-SITE TESTING** விற்பனைக்கு பின் தரம் உங்கள் கண்முன்னே
- **சரியான எடை, தடிமன்** ஏமாற்றமில்லா தயாரிப்பு

### PRODUCT RANGES

| | | | | |
|---|---|---|---|---|
| ISI PVC PIPE - 20mm to 250mm (All Classes) | ASTM UPVC PIPE - 21mm to 114mm (SCH 40, SCH80) | ISI CONDUIT PIPE - 16mm to 63mm (Light, Medium, Heavy) | ISI PLUMBING PIPE - 25mm to 50mm (15KG) | ISI BOREWELL CASING PIPE - 125mm to 250mm |

PVC PIPE / UPVC PIPE / CONDUIT PIPE / CPVC PIPE / SOLVENTS / PVC FITTINGS
LATERAL HOSE / GARDEN HOSE / SUCTION HOSE / WATER TANK

### RITHVIK PIPES PROUDLY TRUSTED BY

LMW isha POWERGRID BHEL

Office
**Rithvik Pipe Company**, Kannaki Street, Mahalingapuram, Pollachi, Coimbatore Dist - 642002
E-mail : sales@rithvikpipes.com
Website : rithvikpipe.com

Factory
**Rithvik Pipe Company**, Opp.Kamaraj Colony, R.V.P Pudur, Palakkad Dist - 678555
E-mail : rithvikpipe@gmail.com
Website : rithvikpipe.com

**For Dealership & Projects Enquiries - 96458 77721, 96458 77741**

# புவிசார் குறியீடு என்றால் என்ன?

## இதுவரை தமிழகத்தில் என்னென்ன பொருட்களுக்கு கிடைத்துள்ளது? தெரியுமா?




புவிசார் குறியீடு (GEROPHICAL INDICATION) (G.I) என்பது ஒரு குறிப்பிட்ட புவியியல் பகுதியிலிருந்து உருவாகும், உற்பத்தியாகும் பொருளுக்கு வழங்கப்படும் அடையாளமாகும்.

அப்பொருள்கள் அவற்றின் உருவாகும் இடத்தின் சிறப்பு குணங்களை (SPICAL FEATURES) கொண்டதாக இருக்கும். உலகின் வெவ்வேறு பகுதிகளில் பல்வேறு வேளாண் பொருட்கள் உற்பத்தி செய்யப்பட்டாலும், குறிப்பிட்ட இடத்தில்/பகுதியில் உற்பத்தி செய்யப்படும் பொருட்கள், அவை உருவாகும் இடத்தின் காரணமாக சுவை, தரம் (TASTE & QUALITY) போன்ற சிறப்பு குணங்களையும் இயற்கையில் தனித்துவமான பொருளாக இருக்க வேண்டும். உலக, தேசிய அளவில் தனித்துவமான பொருளாக இருக்கும் பொருட் களுக்கு புவிசார் குறியீடு வழங்கப்படுகிறது.

**என்ன என்ன பொருட்களாக இருக்க வேண்டும்?**

உணவு பொருட்கள், கைவினைப் பொருட்கள், பிற தயாரிப்புகள், இயற்கை விளைந்த பொருட்கள் என பல்வேறு வகையான பொருட்களுக்கு புவிசார் குறியீடு பெற விண்ணப்பிக்கலாம்.

**தமிழகத்தில் புவிசார் குறியீடு நிலவரம்?**

2021-22 ஆண்டு முதல் ஒவ்வொரு ஆண்டும் வேளாண் நிதி நிலை அறிக்கையில் (AGRICULTURAL BUDGET) அறிவிப்பு மேற்கொள்ளப்பட்டு வேளாண்மை விற்பனை மற்றும் வேளாண் வணிகத்துறை (AM & AB) மற்றும் மாநில

வேளாண் விற்பனை வாரியம் (TNSAMB) & MSME உதவியுடன் புவிசார் குறியீட்டு பதிப்பகத்தின் (G.I REGISTRY) மூலமாக புவிசார் குறியீடு பெற உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

இதுவரை 41 பொருட்களுக்கு விண்ணப்பித்து தற்போது 9 பொருட்களுக்கு புவிசார் குறியீடு தற்போது வரை கிடைக்க பெற்றுள்ளது.

**புவிசார் குறியீடு (G.I.) பெற்றுள்ள பொருட்கள் எவை தெரியுமா?**

1) சோழவந்தான் வெத்திலை
2) பண்ருட்டி பலா
3) விருதுநகர் சம்பா வத்தல்
4) இராமநாத புரம் சித்திரைக்கார் அரிசி
5) புளியங்குடி எலுமிச்சை
6) செட்டிக்குளம் சின்ன வெங்காயம்
7) சேலம் கண்ணாடி கத்திரி
8) தூய மல்லி
9) கவுந்தம் பாடி நாட்டு சர்க்கரை

**புவிசார் குறியீட்டால் என்ன நன்மைகள்?**

1) வேளாண் உற்பத்தியினை உயர்த்துவதோடு, வேளாண் பொருட்களின் மதிப்பினை உயர்த்தி, உரிய சந்தைகளுக்கு எடுத்து சென்று விவசாயிகள் கூடுதல் விலை பெற்று அவர்களின் வாழ்வாதாரம் மேம்படுத்திட உதவும் என்பதே இதனுடைய நோக்கமாகும்.
2) புவிசார் குறியீடு பெற்ற பொருட்களை சந்தைப்படுத்துவது எளிதாக்கப்படுவதுடன் அவற்றின் தேவை மற்றும் ஏற்றுமதி அளவும் அதிகரிக்க உதவும்.
3) உழவர்களின் பொருளாதார வளர்ச்சி உயரும்.

மீதமுள்ள 32 பொருட்களுக்கும் விரைவாக (விருதுநகர் அதலைக்காய், விளாத்திகுளம் மிளகாய், மதுரை செங்கரும்பு, திருநெல்வேலி அவுரி உள்ளிட்ட) புவிசார் குறியீடு பெறபட நடவடிக்கை தீவிரமாக எடுக்கப்பட்டு வருவதாக தெரிவிக்கின்றனர்.

தகவல் : **அக்ரி சு.சந்திரசேகரன், வேளாண் ஆலோசகர், அருப்புக்கோட்டை. 94435 70289.**

# திருப்பதிசாரம் வேளாண்மை அறிவியல் நிலையத்தில் உலக மண் தினம் கொண்டாட்டம் நடந்தது




கன்னியாகுமரி, டிச.6

பயிர் சாகுபடிக்கு மண் தான் ஆதாரம். மண் வளமாக இருந்தால் தான் பயிர்களின் மகசூலும் சிறப்பாக இருக்கும். மண்ணின் வளம் மண்ணுக்கு மண் மாறுபட்டு இருக்கும். அதுபோலவே, ஊட்டச்சத்துக்களின் தேவையும் பயிருக்கு பயிர் வேறுபடும். எனவே, மண் பரிசோதனை செய்து, பயிர்களுக்குத் தேவையான சத்துக்களை சமச்சீர் உரமாக அளிப்பதன் மூலம் உற்பத்தியை அதிகரிக்கலாம். இதனை கருத்தில் கொண்டு, ஒவ்வொரு ஆண்டும் டிசம்பர் 5-ஆம் தேதி உலக மண் தினமாக கொண்டாடப்பட்டு வருகிறது.

கன்னியாகுமரி மாவட்டத்தில் அமைந்துள்ள திருப்பதிசாரம் வேளாண்மை அறிவியல் நிலையத்தில் இந்த ஆண்டிற்கான உலக மண் தினம் டிசம்பர் 5ஆம் தேதி கொண்டாடப்பட்டது. இந்நிகழ்ச்சியை வேளாண்மை அறிவியல் நிலையத்தின் பேராசிரியர் மற்றும் திட்ட ஒருங்கிணைப்பாளர் முனைவர் சா.சுரேஷ் துவக்கி வைத்து, உலக மண் தினத்தின் குறிக்கோள், மண் பரிசோதனையின் முக்கியத்துவம், பயிர் வளர்ச்சியில் சமச்சீர் உர நிர்வாகத்தின் முக்கியத்துவம், நுண்ணூட்ட உரங் களின் பங்கு, அங்கக வேளாண்மையின் முக்கியத்துவம், ஆரோக்கியமான வாழ்வாதரத்தில் மண் வளத்தின் பங்கு ஆகியவவை பற்றி விவசாயிகளுக்கு விரிவாக எடுத்துரைத்தார். பயிர் நோயியல் துறை இணை பேராசிரியை முனைவர் கு. கவிதா, அங்கக முறையில் பயிர் மேலாண்மை முறைகள் பற்றி விளக்கமளித்தார். கன்னியாகுமரி மாவட்டத்தைச் சேர்ந்த 54 விவசாயிகள் கலந்து கொண்ட இந்நிகழ்ச்சியில் வேளாண்மை தொழில்நுட்பங்கள் பற்றிய கண்காட்சியும் அமைக்கப் பட்டிருந்தது. வேளாண்மை அறிவியல் நிலையத்தின் தொழில் நுட்பத் திட்ட உதவியாளர் சுதா, மண் பரிசோதனைக்கான மண் மாதிரி எடுக்கும் முறை பற்றி செயல்விளக்கம் செய்து காண்பித்தார். மேலும் இந்நிகழ்ச்சியில் அனுபவமிக்க விவசாயிகள் தங்களது கருத்துக்களை பரிமாறிக் கொண்டனர்.

இந்நிகழ்ச்சியில் கலந்து கொண்ட விவசாயிகளுக்கு மண்வள அட்டையும், மண் பரிசோதனையின் முக்கியத்துவம் பற்றிய மடிப்பிதழ்களும் வழங்கப்பட்டன.

மேலும் இந்நிகழ்ச்சியில் திருப்பதிசாரம் வேளாண்மை ஆராய்ச்சி நிலைய உதவி பேராசிரியர்கள் முனைவர் ஜோஷி, முனைவர் பிரவீன் சம்பத் குமார், வேளாண்மை அறிவியல் நிலைய பண்ணை மேலாளர் பிரதீபா ஜோஸ்லின் மற்றும் இளநிலை ஆராய்ச்சியாளர் உமா ஆகியோரும் கலந்து கொண்டனர்.



# தென்னையில் ரூகோஸ் சுருள் வெள்ளை ஈ மேலாண்மை

தென்னையை ரூகோஸ் சுருள் வெள்ளை ஈ என்ற சாறு உறிஞ்சும் பூச்சி சமீபக்காலமாகத் தாக்கி பெருத்தச் சேதத்தினை ஏற்படுத்துகிறது.

**அறிகுறிகள்**

● தாக்கப்பட்ட தென்னை இலைகளின் உட்பகுதியில் சுருள் சுருளாக நீள் வட்ட வடிவில் மிகச் சிறிய பூச்சிகளின் கூட்டங்கள் தென்படும்.

● முட்டைகளின் மீது மெழுகு போன்ற வெள்ளை நிறத் துகள்கள் மூடியிருக்கும்.

● இளம் பருவ குஞ்சுகளும் மற்றும் வளர்ந்த வெள்ளை ஈக்களும் ஓலைகளின் உட்புறத்தில் கூட்டம் கூட்டமாக இருந்து கொண்டு சாற்றினை உறிஞ்சி தென்னையில் வளர்ச்சியை பாதிக்கும்.

● இவ்வகை வெள்ளை ஈக்களால் வெளியேற்றப்படும் தேன் போன்ற இனிப்பான கழிவுத் திரவம் கீழ்மட்ட அடுக்கிலுள்ள தென்னங்கீற்றுகளின் மேல்பகுதியில் படியும். இந்த தேன் போன்ற திரவத்தின் மீது கேப்னோடியம் என்ற கரும்பூசணம் வளர்வதால் தென்னை ஓலைகள் தற்காலிகமாகக் கறுப்பு நிறமாகக் காணப்படும்.

● இதனால் ஒளிச்சேர்க்கைத் தடைப்பட்டுத் தென்னையில் வளர்ச்சி குன்றி மகசூல் இழப்பு ஏற்படும்.

● தேன் திரவத்தினைச் சேகரிக்க எறும்புகள் நடமாடுவதைக் காண முடியும்.

● இப்பூச்சியின் பெருக்கமும், தாக்குதலும் தீவிரமாகக் காணப் படும் போது தென்னை மரங்கள் நோயுற்றது போன்ற தோற்றத்துடன் காணப்படும்.

**ரூகோஸ் சுருள் வெள்ளை ஈ ஒருங்கிணைந்த மேலாண்மை**

● ரூகோஸ் சுருள் வெள்ளை ஈக்களை அழித்திட தென்னங்கீற்றுகளின் அடிப்பகுதிகள் நன்கு நனையுமாறு விசைத் தெளிப்பானைக் கொண்டு மிகவேகமாகத் தண்ணீரைப் பீய்ச்சி அடிக்க வேண்டும்.

● மஞ்சள் நிற பாலித்தீன் தாள்களால் உருவாக்கப்பட்ட (நீளம் 5 அடி x அகலம் 1.5 அடி) ஒட்டும் பொறிகளில் இரண்டு புறமும் விளக்கெண்ணெய்யைத் தடவி ஏக்கருக்கு 20 வீதம் தரை மட்டத்திலிருந்து 6 அடி உயரத்தில் தொங்கவிட வேண்டும். தென்னை மரங்களின் தண்டுப்பகுதியில் மஞ்சள் நிற ஒட்டும் பாலித்தீன் தாள்களைச் சுற்றியும் தாய் வெள்ளை ஈக்களைக் கவர்ந்து அளித்திடலாம்.

● விளக்குப்பொறிகளை இரவு நேரங்களில் (6.00 முதல் 10.00 மணி வரை) பயன்படுத்தியும் தாய் வெள்ளை ஈக்களைக் கவர்ந்து அழித்திடலாம்.

● வெள்ளை ஈக்களின் இளங்குஞ்சுகளைக் கட்டுப்படுத்தும் திறன் கொண்ட என்கார்சியா ஒட்டுண்ணிகளைக் கூட்டுப்புழு பருவத்துடன் கூடிய தென்னை இலை துண்டுகளை ஏக்கருக்கு 10 துண்டுகள் வீதம் 10 மரத்திற்கு ஓர் இலைத்துண்டு என்ற எண்ணிக்கையில் தாக்கப்பட்ட தென்னை மரங்களின் கீற்று களில் ஸ்டேப்னர் மூலம் இணைத்து இப்பூச்சிகளைச் சிறந்த முறையில் கட்டுப்படுத்திடலாம்.

● என்கார்சியா ஒட்டுண்ணிகளின் செயல்பாடுகளை மேலும் ஊக்குவிக்க தென்னை மரங்களுக்கு இடையில் கல்வாழை, வாழை, சீதா போன்ற பயிர்களை ஏக்கருக்கு 25 வீதம் ஊடு பயிராகச் சாகுபடி செய்யலாம்.

● கிரைசோபிட் என்றழைக்கப்படும் பச்சைக் கண்ணாடி இறக்கை பூச்சி இரைவிழுங்கி முட்டைகளை ஏக்கருக்கு 400 வீதம் தாக்கப்பட்ட வயல்களில் தென்னைக் கீற்றுகளில் ஸ்டேப்ளர் மூலம் இணைக்க வேண்டும்.

● ஒரு லிட்டர் தண்ணீருக்கு வேப்பெண்ணெய் 5 மி.லி மற்றும் ஒட்டும் திரவம் 1 மி.லி என்ற அளவில் கலந்து மரங்களின் அடிக் கீற்றுகளில் நன்கு நனையும்படி தெளிக்க வேண்டும்.

● கரும்பூசணப் படலத்தை நீக்க 25 கிராம் மைதா மாவுப் பசையை ஒரு லிட்டர் தண்ணீரில் கலந்து தெளிக்க வேண்டும்.

● இயற்கை எதிரிகளைப் பாதுகாக்க பூச்சிக் கொல்லிகளைப் பயன்படுத்துவதை முற்றிலும் தவிர்க்க வேண்டும்.

மேற்காணும் முறையில் கட்டுப்படுத்தலாம் என சேலம் மாவட்டம், சங்ககிரி வட்டார வேளாண்மை உதவி இயக்குநர் வெ.விமலா தெரிவித்தார்.


கல்யாண்
ஜுவல்லர்ஸ்
Toll Free No. 1800 - 4257333

# காற்றை சுத்தப்படுத்தும் தாவரங்கள் - ஒரு பார்வை

## நமது வீட்டுக் காற்றை சுத்தமாக்கும் 12 அதிசயத் தாவரங்கள்

வீட்டுக்குள் நாம் சுவாசிக்கும் காற்றில் கூட கண்ணுக்குத் தெரியாத நச்சுக்கள் இருக்கும். குறிப்பாக, புதுப் பொருட்களின் மணம், சுத்தம் செய்யும் ரசாயனங்களின் மீள் பொருட்கள் மற்றும் கொசு வர்த்தியின் புகை, சமையல் நெடி புகை, ஸ்ப்ரேயர்கள் புகை இவை எல்லாம் தீங்கு விளைவிக்கும் ரசாயனங்களை வெளியிடுகின்றன என்பதை நாம் அறிந்ததே.

**இவை என்ன பிரச்சினை செய்யும் தெரியுமா?**

தலைவலி, சோர்வு, தூக்கமின்மை, மூச்சு சிரமம், ஹார்மோன் பிரச்சினைகள் ஏற்படுகின்றன.

**இதற்கான எளிய, மலிவான, இயற்கையான தீர்வு**

நமது வீட்டில் ஒரு சில நன்மை பயக்கும் தாவரங்கள் வளர்த்தல் மட்டுமே! அதற்கு உறுதுணை புரியும். அதாவது காற்றை சுத்தமாக்க உதவும் 12 சக்திவாய்ந்த தாவரங்கள் வளர்த்து நன்மை பெறலாம். அவை :

**1. Spider Plant (ஸ்பைடர் பிளாண்ட்)**

Formaldehyde, Benzene போன்ற நச்சுக்களை நீக்கும், பராமரிப்பு மிக எளிது, செல்லப்பிராணிகளுக்கு பாதுகாப்பானது.

**2. Peace Lily (பீஸ் லில்லி)**

Benzene, Ammonia, Acetone போன்ற நச்சுக்களை உறிஞ்சும், அழகும், காற்று சுத்தமும் இரண்டும்!

**3. Snake Plant (ஸ்நேக் பிளாண்ட்)**

இரவு நேரத்திலும் ஆக்சிஜன் வெளியிடும். Formaldehyde, Xylene உள்ளிட்ட பல நச்சுக்களை குறைக்கும். படுக்கை அறையில் வைத்தால் தூக்கம் மேம்படும்.

### 4. Elephant Ear (எலிபன்ட் இயர்)

பெரிய இலைகள் நச்சுக்களை இழுக்கும், ஈரப்பதம் குறைக்கும். குழந்தைகளுக்கும் நல்லது.

### 5. Weeping Fig (வீப்பிங் ஃபிக்)

வீட்டுப் பொருட்கள் வெளியிடும் நச்சுகளை சுத்தம் செய்யும். பராமரிப்புக்கு கொஞ்சம் கவனம் தேவை.

### 6. Rubber Plant (ரப்பர் பிளாண்ட்)

வலுவான காற்று சுத்திகரிப்பான், காற்றில் ஈரப்பதத்தையும் அதிகரிக்கும்.

### 7. Reed Palm (ரீட் பாம்)

Formaldehyde போன்ற நச்சுக்களை நீக்கும். வீடு/அலுவலகத்துக்கு சிறந்தது.

### 8. Aloe Vera (அலோவேரா)

Formaldehyde, Benzene குறைக்கும். வெயில் பிடிக்கும், இடம் பிடிக்கும், பராமரிப்பு மிக எளிது.



**9. Gerber Daisy (ஜெர்பர் டெய்ஸி)**

இரவிலும் ஆக்சிஜன் வெளியிடும். காற்றை சுத்தமாக்கும் நிறமணியமான பூ,

**10. Golden Pothos (கோல்டன் பாதோஸ்)**

NASA ஆய்வில் மிகவும் திறமையாக நச்சுக்களை உறிஞ்சியது தெரிய வந்துள்ளது. மிகச் சமாளித்து வளரும் தாவரம்.

**11. Chrysanthemum (செவந்தி)**

பல நச்சுக்களை வடிகட்டி காற்றை தூய்மைப்படுத்தும். வெளிச்சம் பிடிக்கும்.

**12. English Ivy (இங்கிலிஷ் ஐவி)**

வீட்டுக்குள் வரும் அணுக்கூறு தூசுக்களை குறைக்கும். Formaldehyde-ஐ நீக்கும்.

**இந்த 12 தாவரங்களின் காற்று சுத்திகரிப்பு திறனை எப்படி அதிகரிப்பது?**

ஒரு அறைக்கு 4-8 தாவரங்கள் வையுங்கள். இலைகளை தூசி இல்லாமல் சுத்தமாக வைத்துக்கொள்ளுங்கள். அதிகமாக நீர் ஊற்றாதீர்கள். நல்ல மண்வளம் பயன்படுத்துங்கள். தாவரங்களை சில மாதங்களுக்கு ஒரு முறை மாற்றி மாற்றி வையுங்கள்.

எனவே இந்த 12 தாவரங்களை நாம் வளர்த்து நமது வீட்டுக்குள்ளேயே தூய காற்று, நல்ல நித்திரை, ஆரோக்கிய மான சுவாசம் இலவசமாகவே பெறலாம்.

மேலும் தாவரங்களை வீட்டில் வளர்த்தாலே நமது குடும்ப உறுப்பினர்களின் உடல்நலம், மனநலம், வீட்டின் சுற்றுச்சூழல் எல்லாமே மாறிவிடும்.

எனவே இன்றே 4 முதல் 10 தாவரங்களுடன் தொடங்குங்கள், மாற்றத்தை நீங்கள் உணர்வீர்கள்!

தகவல் : **கோ. சுரேஷ்குமார், ஓய்வு பெற்ற வேளாண் அறிவியல் கல்வி ஆசிரியர், கோவில்பட்டி. 94436 20932.**

# வளமான மண், வளமான நகரங்கள் – உலக மண் தின விழா விழிப்புணர்வு முகாம்

நாமக்கல், டிச.6

நாமக்கல் வட்டார வேளாண்மைத்துறையின் சார்பில் விட்டம நாய்க்கன்பட்டி கிராமத்தில் விவசாயிகளுக்கு மண் தின விழா முகாம் நடத்தப்பட்டது.



வேளாண்மை உதவி இயக்குநர் சித்ரா வரவேற்புரையாற்ற, வேளாண்மை இணை இயக்குநர், மல்லிகா தலைமையில் வேளாண்மை துணை இயக்குநர் (மாநில திட்டம்) கவிதா முன்னிலையில் நடைபெற்ற உலக மண் வள தின விழா முகாமில் விவசாயிகளுக்கு மண்வள அட்டைகள் வழங்கி, உலக மண் தின விழா முக்கிய நோக்கமான, வளமான மண், வளமான நகரங்கள் குறித்து விழிப்புணர்வை ஏற்படுத்துவதும், ஆரோக் கியமான மண்ணின் முக்கியத்துவம், பயிர் வளர்ச்சியில் மண்ணில் உள்ள ஊட்டச்சத்தின் பங்கு, மகசூல் பெருக்கத்திற்கு உயிர் உரங்கள், நுண்ணூட்டச்சத்தின் தேவை, மண்ணின் வளங்களை பராமரித்தல், மண் ஆரோக்கியத்தைப் பாதுகாத்தல், மண் அரிப்பைக் குறைத்தல், உணவு உற்பத்தியை உறுதி செய்தல், நீர் மேலாண்மையை மேம்படுத்துதல், மற்றும் மண் பல்லுயிர் பெருக்கத்தை உறுதி செய்தல் குறித்து விளக்கமாக பேசினார்.

உலக மண் தின விழா முகாமில் திருச்செங்கோடு, நடமாடும் மண் பரிசோதனை நிலைய வேளாண்மை அலுவலர்கள் மோகன், சந்திரசேகரன் மற்றும் கோகிலா ஆகியோர் மண் பரிசோதனையின் முக்கியத்துவம் மற்றும் மண்மாதிரி மற்றும் நீர் மாதிரி எடுக்கும் வழிமுறைகள் குறித்தும் தேவையான நேரத்தில் மண் பரிசோதனை செய்வதன் மூலம் சரிவிகித சம

**மரம் வளர்ப்போம்! மழை பெறுவோம்!**

அளவு சத்துக்களை பயன்படுத்தி பயிரின் உற்பத்தியை அதிகரிக்கவும், மண்ணின் தன்மைக்கு ஏற்ப சரியான பயிர் ரக தேர்வு மற்றும் சரியான அளவு உர தேர்வு ஆகியவற்றை மேற்கொண்டு அதிக மகசூல் பெறலாம் என ஆலோசனை வழங்கி செயல் விளக்கமளித்தனர்.

மேலும் உதவி வேளாண்மை அலுவலர் பெரியசாமி மற்றும் வேளாண்மை தொழில்நுட்ப மேலாண்மை முகமை திட்ட அலுவலர்கள் இரமேஷ், கவிசங்கர், நதியா ஆகியோர் மேற்கண்ட உலக மண் தின விழா முகாம் ஏற்பாடுகளை செய்திருந்தனர்.



# குளோரி லில்லியில் இலை கருகல் நோயைக் (Alternaria alternata) கட்டுப்படுத்துதல்

குளோரி லில்லி (குளோரியோசா சூப்பர்பா, கோல்கிகேசி குடும்பம்) என்பது இந்தியாவில் வணிக ரீதியாக வளர்க்கப்படும் ஒரு மருத்துவ தாவரமாகும். கிழங்குகள் மற்றும் விதைகளில் கோல்கிசின்கள், ஐசோபர்லோலிரின் மற்றும் ட்ரோபோலேன் ஆல்கலாய்டுகள் நிறைந்துள்ளன, அவை கீல்வாத எதிர்ப்பு, அழற்சி எதிர்ப்பு மற்றும் கட்டி எதிர்ப்பு செயல்பாட்டைக் கொண்டுள்ளன.

இது ஒரு மூலிகை மற்றும் ஏறும் வற்றாத தாவரமாகும், இது பொதுவாக க்ளைம்பிங்-லில்லி, குளோரி-லில்லி மற்றும் குளோரி யோசா லில்லி மற்றும் ஃபிளேமிலி என அழைக்கப்படுகிறது. இந்த தாவரம் அதன் பூக்களில் குளோரியோசைடு என்ற மற்றொரு ஆல்கலாய்டையும் கொண்டுள்ளது. குறிப்பாக குளோரியோசா சூப்பர்பா தமிழ்நாட்டில் 3,336 ஹெக்டேர் பரப்பளவில் பயிரிடப் படுகிறது. அதிக மருத்துவ மதிப்புள்ள விதைகளின் ஏற்றுமதி திறன் சுமார் 700 கோடி ஆகும். இந்த தாவரம் தமிழ்நாட்டின் மாநில மலராகவும் உள்ளது, மேலும் இது அதன் நிலத்தடி வேர்த்தண்டுக் கிழங்குகளிலிருந்து பரப்பப்படுகிறது. இந்த தாவரம் பல பூச்சிகள் மற்றும் நோய்களால் பாதிக்கப்படுகிறது, அவை குளோரியோசா சாகுபடியில் கடுமையான பிரச்சனையாகக் காணப்படுகின்றன. குளோரியோசாவில் ஏற்படும் முக்கிய நோய்கள் இலை கருகல் மற்றும் கிழங்கு அல்லது அடித்தள தண்டு அழுகல் மற்றும் வாடல். நோய்களில், ஆல்டர்னேரியா ஆல்டர்னேட்டா ஏற்படுத்தும் இலை கருகல் ஒரு தீவிர நோயாகவும் விரிவான மகசூல் இழப்பை ஏற்படுத்துவதாகவும் கண்டறியப்பட்டுள்ளது.

**சாதகமான சுற்றுச்சூழல் நிலைமைகள்**

- மேகமூட்டமான வானிலை
- அதிக ஈரப்பதம் (சுமார் 90%)
- வெப்பமான வெப்பநிலை (25 – 30 டிகிரி செல்சியஸ்)
- மழை அல்லது பனி தொற்றுக்கு தேவையான ஈரப்பதத்தை வழங்கும்
- மேல்நிலை நீர்ப்பாசனம் மற்றும் காற்றினால் வீசப்படும் மழை நோய் வித்திகளைப் பரப்பக்கூடும்
- கடுமையான காற்று தாவரங்களை காயப்படுத்தக்கூடும். இது நோய்க்கிருமிக்கான நுழைவு புள்ளிகளை வழங்குகிறது
- அடர்த்தியான தாவர இடைவெளி மற்றும் மோசமான வடிகால் ஆகியவை நோய் அபாயத்தை அதிகரிக்கும்

## இலை கருகல் நோயின் அறிகுறிகள்

குளோரி லில்லி இலை கருகல் நோயின் அறிகுறிகளில் சிறிய, வெளிர் பழுப்பு நிற, வட்ட வடிவ முதல் நீள்வட்ட வடிவ புள்ளிகள் அடங்கும், அவை பெரிதாகி செறிவான வளையங்களை உருவாக்கு கின்றன. பெரும்பாலும் மஞ்சள் நிற ஒளிவட்டத்துடன் கூடிய இந்தப் புள்ளிகள், ஆரம்பத்தில் இலை நுனிகள், விளிம்புகள் மற்றும் மைய நரம்புகளில் தோன்றும். மேம்பட்ட நிலைகளில், புள்ளிகள் அடர் பழுப்பு நிறத்தில் இருந்து கருப்பு நிறமாக மாறி, ஒன்றிணைந்து பெரிய கருகிய பகுதிகளை உருவாக்குகின்றன, மேலும் இலைகள் இறுதியில் முற்றிலும் வறண்டு போகலாம். மற்ற அறிகுறிகளில் மஞ்சள் நிறமாக மாறுதல், நிறமாற்றம் மற்றும் தண்டுகளில் அடர் பழுப்பு நிற புண்கள் ஆகியவை அடங்கும்.

## ஒருங்கிணைந்த நோய் மேலாண்மை உத்திகள்

- ஈரப்பதத்தைக் குறைக்க தாவரங்களுக்கு இடையில் சரியான இடைவெளியை உறுதி செய்தல், இது பூஞ்சை வளர்ச்சியை ஊக்குவிக்கிறது.
- இலைகளை உலர வைக்க தாவரங்களின் அடிப்பகுதியில் அதிகப்படியான நீர்ப்பாசனம் மற்றும் தண்ணீரைத் தவிர்க்கவும்.



- பூஞ்சை பரவுவதைத் தடுக்க, கருகிய இலைகள் மற்றும் பிற தாவர குப்பைகளை உடனடியாக அகற்றி அழிக்கவும்.
- பருவத்திலிருந்து பருவத்திற்கு மண்ணில் நோய்க்கிருமி குவிவதைத் தடுக்க பயிர்களை சுழற்றுங்கள்.
- டெபுகோனசோலை (0.1%) இரண்டு முறை பயன்படுத்துதல் – நடவு செய்த 30 மற்றும் 60 நாட்களுக்குப் பிறகு – இலை கருகல் நோயை திறம்பட நிர்வகிப்பது மட்டுமல்லாமல், மகசூலில் கணிச மான முன்னேற்றத்தையும் ஏற்படுத்தும்.
- நடவு செய்த 30 மற்றும் 60 நாட்களில் பேசிலஸ் சப்டிலிஸை 2 கிராம்/லிட்டர் தண்ணீரில் தெளிக்கவும்.
- வயலில், சூடோமோனாஸை ஃப்ளோரசென்ஸை எலுமிச்சைப் புல் எண்ணெயுடன் சேர்த்துப் பயன்படுத்துவது நோயின் தீவிரத்தைக் குறைக்கும்.

கட்டுரையாளர் : ம.பானுப்பிரியா, உதவிப் பேராசிரியர் (பயிர் நோயியல்), பயிர் பாதுகாப்புத் துறை, நாளந்தா வேளாண்மைக் கல்லூரி, திருச்சி, தமிழ்நாடு. Email : banumalai1996@gmail.com.

# Rithvik Pipe

IS 4985 : 2021 | IS 9537

# 25 ஆண்டுகள் உத்தரவாதத்துடன் கிடைக்கும் ரித்விக் PVC பைப்புகள்




## பைப் மட்டும் வாங்காமல் நிம்மதியையும் சேர்த்து வாங்குங்கள்

- **25 ஆண்டுகள் உத்தரவாதம்**
  நம்பிக்கைக்கு அடையாளம்
- **100% LEAD-FREE பைப்புகள்**
  ஆரோக்கியமான தண்ணீர், ஆரோக்கியமான வாழ்க்கை
- **ISI சான்று பெற்ற பைப்புகள்**
  தரத்திற்கு ஒரே அடையாளம்
- **ISI பைப்புகள் மட்டும் தயாரிக்கும்**
  நிறுவனம்–தரத்தின் தனிப்பெரும் அடையாளம்
- **67 GRADE மூலப்பொருட்கள்**
  அதிக வலிமை, நீண்ட ஆயுள்
- **TEST CERTIFICATE – QR CODE மூலமாக**
  ஒவ்வொரு பைப்பிலும் நேரடியாக பதிவிறக்கம் செய்துகொள்ளலாம்
- **FREE ON-SITE TESTING**
  விற்பனைக்கு பின் தரம் உங்கள் கண்முன்னே
- **சரியான எடை, தடிமன்**
  ஏமாற்றமில்லா தயாரிப்பு

## PRODUCT RANGES

| | | | | |
|---|---|---|---|---|
| ISI PVC PIPE - 20mm to 250mm (All Classes) | ASTM UPVC PIPE - 21mm to 114mm (SCH 40, SCH80) | ISI CONDUIT PIPE - 16mm to 63mm (Light, Medium, Heavy) | ISI PLUMBING PIPE - 25mm to 50mm (15KG) | ISI BOREWELL CASING PIPE - 125mm to 250mm |

PVC PIPE / UPVC PIPE / CONDUIT PIPE / CPVC PIPE / SOLVENTS / PVC FITTINGS
LATERAL HOSE / GARDEN HOSE / SUCTION HOSE / WATER TANK

## RITHVIK PIPES PROUDLY TRUSTED BY

LMW. isha POWERGRID BHEL

**Office**
**Rithvik Pipe Company**, Kannaki Street,
Mahalingapuram, Pollachi, Coimbatore Dist - 642002
E-mail : sales@rithvikpipes.com
Website : rithvikpipe.com

**Factory**
**Rithvik Pipe Company**, Opp Kamaraj Colony,
R.V.P Pudur, Palakkad Dist - 678555
E-mail : rithvikpipe@gmail.com
Website : rithvikpipe.com

**For Dealership & Projects Enquiries - 96458 77721, 96458 77741**